பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
07 04 2025 **MONDAY** 7 15 **AM**
வணக்கம், ஆகாஷவாணி செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. போர்ச்சுக்கல் சென்றுள்ள குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு அந்நாட்டு அதிபர் **Marcelo Rebelo Desousa-**வுடன் இன்று பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

2. ஜம்மு காஷ்மீரின் முன்னேற்றத்திற்காக பிஜேபி தொடர்ந்து பாடுபடும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

3. ரிசர்வ் வங்கியின் 3 நாள் நிதிக் கொள்கை குழுக் கூட்டம் மும்பையில் இன்று தொடங்குகிறது.

4. உலக சுகாதார தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

5. சான் பிரான்சிஸ்கோ-வில் நடைபெற்று வரும் இளையோர் டேபிள் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் **Atherva Gupta** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

>>>>>><<<<<<

அரசுமுறைப் பயணமாக போர்ச்சுக்கல் சென்றுள்ள குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்முவுக்கு **Lisbon** விமான நிலையத்தில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

அந்நாட்டு அதிபர். **Marcelo Rebelo Desousa,** பிரதமர் **Luis Montenegro** உள்ளிட்ட தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

போர்ச்சுக்கலில் வசிக்கும் இந்திய வம்சாவளியினர் மற்றும் அந்நாட்டில் உள்ள பல்கலைக் கழகங்களில் பணியாற்றும் இந்திய ஆராய்ச்சியாளர்களையும் குடியரசுத்தலைவர் சந்திக்கவுள்ளார்.

இந்தியா – போர்ச்சுக்கல் இடையே தூதரக உறவு ஏற்பட்டதன் 50வது ஆண்டு நிறைவைக் குறிக்கும் சிறப்பு அஞ்சல் தலையையும் திருமதி. திரௌபதி முர்மு வெளியிடவுள்ளார்.

குடியரசுத்தலைவரை கௌரவிக்கும் வகையில், லிஸ்பன் மாநகர மேயர் சிறப்பு நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>>><<<<<<

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தலைமையில், ஜம்மு காஷ்மீரின் முன்னேற்றத்திற்காக பிஜேபி தொடர்ந்து பாடுபடும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

மூன்று நாள் பயணமாக நேற்று ஜம்மு காஷ்மீர் சென்றுள்ள அவர், பிஜேபி சட்டப்பேரவை உறுப்பினர்கள் மற்றும் கட்சியின் மூத்த நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

ஜம்மு காஷ்மீரின் சட்டம் ஒழுங்கு நிலவரம் குறித்து இன்று அவர் ஆய்வு செய்யவுள்ளார்.

இக்கூட்டத்தில் மத்திய ஆயுத காவல்படையினர், ஜம்மு காஷ்மீர் காவல்துறை மற்றும் புலனாய்வு அமைப்புகளின் உயரதிகாரிகள் பங்கேற்கவுள்ளனர்.

தீவிரவாத எதிர்ப்பு நடவடிக்கைகள், எல்லை தாண்டிய ஊடுருவல் தடுப்பு உள்ளிட்ட அம்சங்கள் குறித்து ஆய்வு செய்வதுடன், சர்வதேச எல்லைப் பகுதியையும் திரு. அமித் ஷா நேரில் ஆய்வு மேறகொள்கிறார்.

>>>>>><<<<<<

ரிசர்வ் வங்கியின் 3 நாள் நிதிக் கொள்கை குழுக் கூட்டம் மும்பையில் இன்று தொடங்குகிறது.

நடப்பு நிதியாண்டில் நடைபெறும் இந்த முதலாவது கூட்டத்தில் ரெப்போ வட்டி விகிதம் உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து விவாதிக்கப்படவுள்ளது.

மேலும், பணவீக்கம், பொருளாதார குறியீடுகள் உள்ளிட்ட அம்சங்களின் அடிப்படையில் வட்டி விகிதம் நிர்ணயிக்கப்படும் என தெரிகிறது.

இக்கூட்டத்தில் மேற்கொள்ளப்படும் முடிவுகள் நாளை மறுநாள் அறிவிக்கப்படும் என்று ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.

>>>>>><<<<<<

உலக சுகாதார தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

'ஆரோக்கியமான தொடக்கம் - நம்பகமான வருங்காலம்' என்பதே இந்த ஆண்டின் மையக் கருத்தாகும்.

மகளிரின் ஆரோக்கியம், தாய்சேய் இறப்பு விகிதத்தை குறைத்தல் உள்ளிட்ட அம்சங்கள் குறித்து அனைத்து நாடுகளும் ஒரு வருட காலத்திற்கு சிறப்பு பிரச்சார இயக்கத்தை மேற்கொள்ளுமாறு உலக சுகாதார அமைப்பு கேட்டுக் கொண்டுள்ளது.

இந்தியாவில் மகளிர் நலனுக்காக மத்திய அரசு செயல்படுத்தி வரும் ஆயுஷ்மான் பாரத் உள்ளிட்ட திட்டங்களின் பலனாக பேறுகால இறப்பு விகிதம் ஒரு லட்சம் பிரசவத்திற்கு 97 என்ற அளவில் குறைந்துள்ளதாக மத்திய சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

பச்சிளம் குழந்தைகளின் இறப்பு விகிதமும், ஆயிரம் பிரசவத்திற்கு 28 என்ற அளவில் குறைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, உலக சுகாதார தினத்தை ஒட்டி, ஆயுஷ்துறை சார்பில் ஒடிசா மாநிலம், புவனேஷ்வரில் இன்று யோகா திருவிழா நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில் ஆயுஷ்துறை இணையமைச்சர் திரு.பிரதாப்ராவ் ஜாதவ் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்கிறார்.

>>>>>><<<<<<

மத்திய அரசின் வக்ஃப் திருத்தச் சட்டத்திற்கு, திண்டுக்கல் மாவட்டம், பழநி அருகேயுள்ள பாலசமுத்திரம் பேரூராட்சி மக்கள் வரவேற்பு தெரிவித்துள்ளனர்.

இப்பகுதியில் உள்ள நிலங்கள் அனைத்தும் வக்ஃப் வாரியத்திற்கு சொந்தம் என்று கூறி, நிலங்களை விற்கவோ வாங்கவோ முடியாமல் இருந்த நிலையில், புதிய சட்டம் தங்களுக்கு பயனளிக்கும் வகையில் அமையும் என்று கிராம மக்கள் நம்பிக்கை தெரிவித்தனர்.

(சவுண்ட் பைட் - பொதுமக்கள் 22 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

கடற்படை கமாண்டர்கள் மாநாட்டின் இரண்டாவது பகுதி, புதுதில்லியில் இன்று தொடங்குகிறது.

நான்கு நாட்கள் நடைபெறும் இந்த மாநாட்டில், கடலோர பாதுகாப்பு, போர் ஆயத்த நிலை, கடற்படையின் நிர்வாக விவகாரங்கள் குறித்து ஆலோசிக்கப்படவுள்ளது.

இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் நம்பகத்தகுந்த பங்குதாரராக இந்தியாவை முன்நிறுத்துவதற்கான அம்சங்கள் குறித்தும் இம்மாநாட்டில் விவாதிக்கப்படவுள்ளது.

>>>>>><<<<<<

நாட்டின் வடமேற்கு பகுதிகள் மற்றும் மஹாராஷ்ட்ராவில் அடுத்த 4 நாட்களுக்கு வெப்பநிலை அதிகரிக்கக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

2 முதல் 4 டிகிரி செல்சியஸ்வரை வெப்பநிலை உயரக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடலோர ஆந்திரா மற்றும் கர்நாடகாவில் இடிமின்னலுடன் கூடிய மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாகவும், அந்தமான் நிகோபார் தீவுகளில் அடுத்த 7 நாட்களுக்கு இதே நிலை நீடிக்கும் என்றும் வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக அந்த மையம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் தமிழகத்தில் திண்டுக்கல், கரூர் உள்ளிட்ட மாவட்டங்களில் பரவலாக மழை பெய்துள்ளது.

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் நேற்றிரவு பலத்த காற்றுடன் இரண்டு மணி நேரத்திற்கும் மேலாக கனமழை பெய்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் — லெட்சுமணன் 34 செகண்ட்ஸ்)

**>>>>>><<<<<<**

அதிபர் திரு. டொனால்டு ட்ரம்பின் கூடுதல் வரி விதிப்பு குறித்து பேச்சுவார்த்தை நடத்த 50க்கும் மேற்பட்ட நாடுகள் தொடர்பு கொண்டுள்ளதாக வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து தொலைக்காட்சி ஒன்றுக்கு பேட்டியளித்த அமெரிக்க நிதியமைச்சர் திரு. ஸ்காட் பெசண்ட், தைவானில் அமெரிக்க பொருட்கள் மீதான விரியை முற்றிலும் விலக்கிக் கொள்ள அந்நாட்டு அதிபர் முன்வந்துள்ளதாக கூறினார்.

மேலும், தைவான் நாட்டு நிறுவனங்களில் அமெரிக்காவின் முதலீட்டை அதிகரிக்கவும் அவர் விருப்பம் தெரிவித்துள்ளதாக குறிப்பிட்டார்.

இதனிடையே, அமெரிக்காவின் கூடுதல் வரிவிதிப்பு நடவடிக்கை உலக பொருளாதாரத்தில் புதிய சகாப்தத்திற்கு வழிவகுத்துள்ளதாக இங்கிலாந்து பிரதமர் **Keir Starmer** தெரிவித்துள்ளார்.

அமெரிக்கவின் வரிவிதிப்பு தொடர்பாக ஐரோப்பிய ஆணையத்தின் தலைவர் மற்றும் ஜெர்மன் பிரதமருடன் ஆலோசனை நடத்திய பின் இதனை தெரிவித்துள்ள அவர், ஐரோப்பாவில் உள்ள பிற நாடுகளின் தலைவர்களுடன் தொடர்ந்து ஆலோசனை நடத்தி உரிய முடிவுகள் எடுக்கப்படும் என்றும் கூறியுள்ளார்.

**>>>>>><<<<<<**

சான் பிரான்சிஸ்கோ-வில் நடைபெற்று வரும் இளையோர் டேபிள் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் **Atherva Gupta** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

17 வயதுக்குட்பட்டோருக்கான ஆடவர் ஒற்றையர் பிரிவில் காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர் 11-7, 6-11, 11-5, 11-9 என்ற செட்கணக்கில் அமெரிக்காவின் **Liren Zhang** –ஐ வென்றார்.

மகளிர் பிரிவில் **Hansini Mathan-**ம் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர் 11-2, 11-8, 11-7 என்ற செட்கணக்கில் அமெரிக்காவின் **Amy Zhang-**ஐ வென்றார்.

**>>>>>><<<<<<**

உலக கோப்பை துப்பாக்கிச் சுடும் போட்டியில் இந்தியாவின் **Rudranksh** தங்கப்பதக்கம் வென்றார்.

**Buenos Aires-**ல் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் 10 மீட்டர் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

இப்போட்டியில் இந்தியா இதுவரை 2 தங்கம், ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றுள்ளது.

**>>>>>><<<<<<**

ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் குஜராத் அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் ஹைதராபாத் அணியை வென்றது.

மும்பையில் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் மும்பை அணி – பெங்களூரு அணியை எதிர்கொள்கிறது.

**>>>>>><<<<<<**

ஃபிரான்ஸில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Rohan Bopanna -** அமெரிக்காவின் **Ben Shelton** இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை 6-3, 7-5 என்ற செட்கணக்கில் அர்ஜென்டினாவின் **Francisco –** சிலியின் **Alejandro Tabilo** இணையை வென்றது.

**>>>>>>>END<<<<<<**